### 11. நல்லறம் காண்பாய்

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்;
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை,
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்,
கயக்கறு நல்லறம் கண்டனை" என்றலும்

கைம்மாறு செய்யும் சக்தி உடையவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பவர் அறத்தினை விலைகூறி விற்பவராவர். கைம்மாறு செய்வதற்கும் இயலாத ஏழைகளின் பெரும் பசியினைப் போக்குபவரே உண்மையாக அறம் செய்பவர்கள். மெய்ந்நெறியோடு கூடிய வாழ்க்கை என்பதும் கொடுத்து மகிழும் அத்தகையோரின் வாழ்க்கையேயாகும். அணுச்செறிந்த இந்த உலகத்திலே வாழ்பவர்களுக்கு எல்லாம் உணவு கொடுத்தவர் எவரோ, அவர்தாம் உயிர் கொடுத்தவரும் ஆவர். அப்படி உயிர் வழங்குதலை மேற்கொண்ட உறுதியுடையவள் நீயும் ஆயினை. கலக்கமற்ற நல்லறத்தினையும் அறிந்தனை!" என்றனள் தீவதிலகை. அவள் அங்ஙனம் சொல்லலும், மணிமேகலை கூறுவாள்.